செ.வெ.எண்: 14 நாள்: 07.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மைத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் சொட்டுநீர் பாசன முறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குவாகம் கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் சொட்டுநீர் பாசன முறையில் நடைபெற்றும் வரும் விவசாயிகளின் நிலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் (06.04.2017) அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் நாளுக்கு நாள் நீர் பற்றாக்குறை அதிகரித்து வரும் நிலையிலும் சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி வருங்காலத் தலைமுறைக்கு வளமான நீர்வள மோன்மையை விட்டுச்செல்லவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இந்நிலையில் விவசாயத்தில் சிக்கனமாக நீரை செலவு செய்து இருமடங்கு உற்பத்தியும், மும்மடங்கு வருமானமும் பெற தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மைத்துறை மூலம் காய்கறி பயிர்கள், மலர்கள், பழப் பயிர்கள், கரும்பு, சோளம் போன்றவைகள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப்பாசனம் அமைத்து தரப்படுகிறது.

அதன்அடிப்படையில், தோட்டக்கலைத் துறையின் மூலம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கூவாகம் கிராமத்தில் திரு.காமராஜ், த/பெ.செல்லபெருமாள் என்பவர் 1.60 ஹெக்டேர் நிலத்தில் சொட்டுநீர் பாசன முறை பயன்படுத்தி முல்லை, கனகாம்பரம் பூக்கள் பயிரிட்டு சிறப்பான முறையில் விவசாயம் செய்து வருகிறார். திருமதி.சித்ரா க/பெ.கலியபெருமாள் என்பவர் 1.46 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் சொட்டுநிர் பாசன முறை பயன்படுத்தி எலுமிச்சை பயிரிட்டு சிறப்பான முறையில் விவசாயம் செய்து வருகிறார்.

மேலும், வேளர்ணமைத்துறையின் மூலம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கூவாகம் கிராமத்தில் திருமதி.அன்புசெல்வி க/பெ.அண்ணாதுரை மற்றும் பாரிவள்ளல் த/பெ.சின்னதுரை ஆகியவர்கள் தலா 1.00 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்தி கரும்பு பயிரிட்டு சிறப்பான முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். எனவே, விவசாய பெருமக்கள் இத்திட்டத்தினை அனைவரும் பயன்படுத்தி தண்ணீரை சிக்கனப்படுத்தி விவசாயத்தை பெருக்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.அன்புராஜன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியார் (வேளாண்மை) திரு.இளங்கோவன், உதவி இயக்குநர் (பொ) ஆண்டிமடம் திரு.சிவக்குமார் மற்றும் தோட்டக்கலை, வேளாண்மைத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.